# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் –20


# வேதாகமத்தின் முதல் தீர்க்கதரிசனமும் அதன் மறைபொருளும்



Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் முதல் தீர்க்கதரிசனமும் அதன் மறைபொருளும்



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இப்பாடத்தில் ஸ்திரீயின் வித்து மற்றும் சர்ப்பத்தின் வித்து குறித்து ஆராய்வோம். ஏதேன் பூங்காவில் தேவன் தந்த மிக முக்கியமானதும் ஆச்சரியமானதும், வேதாகமத்தின் முதல் தீர்க்கதரிசனமும் இதுவே. புசிக்கவேண்டாம் என்று தேவன் விலக்கின கனியை முதன்முதலில் ஏவாள் புசித்து, பின்பு அதை ஆதாமுக்கும் கொடுத்து, இப்படியாக தேவனுக்கு எதிராக கீழ்ப்படியாமையில் சென்றபோது, அவர்களை வஞ்சித்த சாத்தானாகிய சர்ப்பத்தையும், மற்றும் ஆதாம் ஏவாளையும் சபிக்கும்போது கூறப்பட்ட தீர்க்கதரிசனமே இதுவாகும்.

**ஆதியாகமம் 3:14ல் -'அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து, 'நீ இதைச் செய்தபடியால் சகல காட்டு மிருகங்களிலும் நாட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய். நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய் "** என்றார்.



அப்போஸ்தலனாகிய பவுலும் இதுபற்றிக் கூறும்போது,

**2கொரிந்தியர் 11:3 ல்,'சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல'**

இங்கு நாம் கூர்ந்து கவனிக்கவேண்டிய காரியம் என்னவெனில், தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தை சபிப்பதுபோல சாத்தானையே மறைமுகமாக சபிக்கிறார். எவ்வாறெனில், சர்ப்பத்தைப் பார்த்து, வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய் என்று கூறினது, நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ளமுடியாது. ஏனெனில்

எந்தவொரு சர்ப்பமும் மண்ணைத் தின்பதில்லை என்று நாம் அறிந்திருக்கிறோம். பொருள் என்னவெனில், உன்னதமான பரலோக வாசஸ்தலத்திலிருந்து தள்ளப்பட்டு, இனி பூமியில் அவனது வாசஸ்தலம் இருக்கும் என்பதையே குறிக்கிறது. ஏன் சாத்தானை சர்ப்பத்திற்கு ஒப்பிட்டு பேசப்பட்டிருக்கிறது? ஏனெனில்,தேவனுடைய சிருஷ்டிப்பில் அண்ட சராசரத்தில் கோடானுகோடி நட்சத்திரக் கூட்டங்கள் உள்ளன. இதுபற்றி யோபுவின் புஸ்தகத்தில், 38ம் அதிகாரத்தில் சில நட்சத்திரக் கூட்டங்கள் பற்றி வாசிக்கிறோம். மேலும், இவைகளைப் பராமரித்து வழிநடத்துவதற்காக அநேக மேன்மையான தூதர்களை தேவன் நியமித்திருக்கிறார். அதுமட்டுமல்ல, அநேக நட்சத்திரக் கூட்டங்கள் ஒரு குறிப்பிட்ட வடிவங்களில் தேவன் சிருஷ்டித்திருக்கிறார். லூசிபராகிய ஒரு தூதருக்கும் தேவன் ஒரு சர்ப்ப வடிவத்திலுள்ள ஒரு நட்சத்திரத்தை,அவனுடைய வீழ்ச்சிக்கு முன்பாக வடிவமைத்திருந்தார். இதைக் குறித்து பின்வரும் வகுப்புகளில் இன்னும் விபரமாக ஆராயலாம்.

**யோபு 26:13ல், 'தனது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார். அவருடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கிற்று"**

என வாசிக்கிறோம்.

ஆக, தேவன் தள்ளின இந்த சர்ப்ப நட்சத்திரமாகிய சாத்தானையே இன்று எல்லோரும் சிலை வடிவில் ஆராதிக்கிறதை நாம் காண்கிறோம்.எனவே சாத்தானை தேவன் சபிக்கும்போது,

**ஆதியாகமம் 3:15ல்,'உனக்கும் ஸ்திரீக்கும், உன்வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்"**

இங்கு **வித்து (Seed)என்பது வாரிசு அல்லது சந்ததி** என்று பொருள்படும். இங்கு யார் சர்ப்பத்தினுடைய வித்து? யார் ஸ்திரீயினுடைய வித்து? என நாம் இப்பொழுது ஆராயலாம்.

இங்கு கூறப்பட்ட அடையாளமொழியில் உள்ள தீர்க்கதரிசனத்தில், சர்ப்பத்தின் தலையை நசுக்கும் அல்லது அழிக்கும் ஒரு மீட்பரைக்குறித்து தேவன் இங்கு கூறுகிறார். ஆனால் யார் அந்த ஸ்திரீயின் வித்து என்பது சாத்தானுக்கு அப்போது புரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் தன்னைத்தான் தேவன் குறிப்பிடுகிறார் என்பது நன்கு புரிந்திருக்கும். மேலும், யார் அந்த வித்து என்பது குறித்த ஆர்வம் அதிகரித்திருக்கும்.ஆதாம் ஏவாளுக்குக் கூட, தன்னுடைய இரு குழந்தைகளான காயீன் அல்லது ஆபேல் ஆகிய இருவரில், ஆபேலின் பலியை தேவன் அங்கீகரித்ததால், ஆபேலே அந்த ஸ்திரீயின் வித்து என எண்ணியிருக்கக்கூடும். ஆனால் ஆபேல் வெகுவிரைவில் மரித்தார். மேலும் தேவன் இந்த தீர்க்கதரிசனத்தை உரைத்தபின்பு, முதல் உலகம் முடியும்வரை மீண்டும் இவ்வித்து பற்றி

எதுவும் கூறவில்லை.

தேவன் மீண்டும் இரண்டாம் உலகில், ஊர் என்னும் கல்தேய தேசத்திலிருந்து தகப்பனாகிய ஆபிரகாமை அழைத்து , அவரை பல்வேறு சோதனைகளின்மூலம் தகுதியாக்கினபின்பு, ஒரு மிகப்பெரிய வாக்குத்தத்தத்தை அவரிடத்தில் செய்கிறார்.

**ஆதியாகமம் 12:2,3ல், 'நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததிக்குள் பூமியின் சகல்' ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும**

இங்கு **சந்ததி என்ற சொல்லானது Seed என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதை நாம் கவனிக்கவேண்டும்.** ஆனாலும் இச்சமயத்தில், ஆபிரகாமுக்கு 99 வயதும், சாராளுக்கு 90 வயதாகியும் பிள்ளையில்லாமல் இருந்தனர். ஆகவே

**ஆதியாகமம் 17:16,17ல், -நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன், அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன் என்றார். அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து, நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டு.."**

இந்த ஆசீர்வாதம் குறித்து ஆபிரகாம் நகைத்தபோதிலும், தேவன் உரைத்ததுபோலவே, ஈசாக்கு அவருக்கு கிடைத்தபோது, அவருடைய விசுவாசம் தன் குமாரரையே பலியிடும் அளவிற்கு உயர்ந்தது(ஆதியாகமம் 22:1-3).



**ஆதியாகமம் 22:16-18ல்,'உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன்... உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்.."**

என்ற பெரிய வாக்குத்தத்தத்தின் மூலம் ஏதேனில் சொல்லப்பட்ட அந்த வித்து ஆபிரகாமின் சந்ததியே என்பது தெளிவாகிறது. இவ்வாக்குத்தத்தப்படி, விழுந்துபோன மனுக்குலம் அனைத்திற்கும் இச்சந்ததியின் மூலம் விடுதலை கிடைக்கும் என்பதும் உறுதியாகிறது.

**'ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமதுபேரிலே தானே ஆணையிட்டு:**

**நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார். அந்தப்படியே அவன் பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்"- எபிரே 6:13-18.**

இவ்வாறிருக்க , ஆபிரகாம்கூட ஈசாக்கு தனக்கு பிறந்தவுடன் அவரே அச்சந்ததி என நினைத்திருக்கக்கூடும்.ஆனால் ஆபிரகாமின் மரணத்திற்குப் பிறகு இதே வாக்குத்தத்தத்தை தேவன் ஈசாக்கினிடத்திலும், பின் யாக்கோபினிடத்திலும் அதேவிதமாகக் கூறி உறுதிசெய்ததினால், அச்சந்ததியானது அவர்களிருவரும் இல்லை என்பதும் தெளிவாகிறது. **ஆதியாகமம் 26:4, மற்றும் ஆதியாகமம் 28:14** ஆகிய வசனங்களை வாசித்தறியவும்.

இதே வாக்குத்தத்தம் அநேக வருடங்களுக்குப் பிறகு, மீண்டும் **சங்கீதம் 105:8-11** இல் உறுதிசெய்யப்படுவதைக் காண்க.

**'ஆயிரந்தலைமுறைக்கென்று அவர் கட்டளையிட்ட வாக்கையும், ஆபிரகாமோடே அவர் பண்ணின உடன்படிக்கையையும், அவர் ஈசாக்குக்கு இட்ட ஆணையையும் என்றென்றைக்கும் நினைத்திருக்கிறார்.அதை யாக்கோபுக்குப் பிரமாணமாகவும், இஸ்ரயேலுக்கு நித்திய உடன்படிக்கையாகவும் உறுதிப்படுத்தி, உங்கள் சுதந்தர பாகமான கானான் தேசத்தை உனக்குத் தருவேன் என்றார்"**

யாக்கோபிற்குப் பின் **ஆதியாகமம் 49:8-10** ல், யாக்கோபின் 12 குமாரர்களில் ஒருவராகிய யூதாவினிடம் அவர் தந்தை செய்த ஆசீர்வாதத்தைக் கவனித்தால்,

**'சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவது இல்லை. ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்"**

ஒருவேளை ஆபிரகாமின் சந்ததியில் யூதாவின் வம்சத்தில் வரவேண்டிய இந்த வித்தாக இருக்குமோ? முதலாவது, ஸ்திரீயின் வித்து என்றால் என்ன? எனும்போது புருஷ சித்தமில்லாமல் ஸ்திரீயின் மூலம் உருவாகும் வாரிசு ஆகும். அப்போஸ்தலர் பவுல் கூறும்போது,

**கலாத்தியர் 4:5ல்,'காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்"**




கிறிஸ்துவின் பிறப்புக் குறித்து காபிரியேல் தூதர் மரியாளிடம் சொல்லும்போது,

**லூக்கா 1:31,34-35 ல் - 'நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக.. அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி இது எப்படியாகும், புருஷனை அறியேனே என்றாள்.. பரிசுத்தஆவி உன்மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்"**

அன்பானவர்களே, தேவனுடைய சர்வ வல்லமையினால், புருஷ சித்தமில்லாமலே ஒரு ஜீவனை தாயின் வயிற்றில் உருவாகச் செய்யமுடியும் என்பதை நாம் மறக்கக்கூடாது. ஆதியில் ஏதேனில் ஆதாமிடத்திலிருந்தே ஏவாளை பிரித்து சிருஷ்டித்ததை கவனிக்கவும். இதுமாத்திரமல்ல, இன்று நவீன விஞ்ஞானத்தில் மனிதர்களே புருஷ சித்தமில்லாமல், ஒரு பிராணியினுடைய உயிர்செல்லிலிருந்து, அநேக சந்ததிகளை உருவாக்கும் சக்திபெற்றிருக்கும்போது(குளோனிங்), பிதாவாகிய தேவனுக்கு இது ஒரு பெரிய காரியமல்ல என்பதை விசுவாசிக்கவேண்டும்.

**மேலும் லூக்கா 2:10,13 -ல்,'தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.. அந்நேரம் பரமசேனையின்(தூதர்) திரள் அந்த தூதனோடே தோன்றி.'**

ஏதேனில் யார் அந்த வித்து என்று புரியாமல் இருந்த சாத்தானுக்கு இப்போது தூதர்கள் அனைவரும் பூரிப்பாகும்போது, இக்குழந்தையே அந்த வித்து என்பது புரிந்திருக்கும். ஏரோது மூலம் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகள் அனைவரையும் கொலை செய்யத்தூண்டப்பட்டு, அவ்வித்தை அழிக்க முற்பட்டபோது தேவன் ஆச்சரியவிதமாக இயேசுவை காப்பாற்றினதை நாம் அறிவோம். பின் சாத்தான் அவரை மும்முறை சோதிக்கும்போதும், யூதர்கள் மூலம் சிலுவையிலறைந்து கொலை செய்தபோதும், அவ்வித்தாகிய கிறிஸ்துவை முழுமையாக அழித்துவிட்டதாக எண்ணியிருப்பான். ஆனால் மீண்டும் தேவன் தம்முடைய அளவில்லா வல்லமையினால் கிறிஸ்துவை மரணத்திலிருந்து ஏறிவரப்பண்ணினார் -



**எபிரேயர் 13:20 - 'நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடையபெரியமேய்ப்பனான நம்முடையகர்த்தராகியஇயேசுவைமரித்தோரிலிருந்து ஏறி வரப்பண்ணின சமாதானத்தின் தேவன்.."**

**எபிரேயர் 2:14,15ல்,'மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்"**

அநேகர் சிலுவை மரணம் மூலம் சாத்தானை அழித்துவிட்டார் என்று நம்புகின்றனர். ஆனால் சாத்தான் இன்றுவரை உள்ளதை யாராலும் மறுக்கமுடியாது. அவ்வாறெனில், அந்த சந்ததி இயேசுகிறிஸ்துவா?

அந்த சந்ததி பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது,



**கலாத்தியர் 3:16ல், 'ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன... உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்து சொல்லியிருக்கிறார். அந்த சந்ததி கிறிஸ்துவே"**

அந்த சந்ததி என்பது கிறிஸ்து மாத்திரமல்ல, கீழுள்ள வசனத்தில் பார்க்கும்போது,

**கலாத்தியர் 3:7, 29 -ல், 'விசுவாச மார்க்கத்தார் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக.."**

**..'நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்".**

மேற்சொன்ன வசனங்களின் மூலம், கிறிஸ்து அந்த சந்ததியாக இருந்தாலும். இன்னும் அநேகர் அச்சந்ததியாக இருப்பதாக அப்போஸ்தலர் பவுல் தெளிவாக விளக்குகிறார். எவ்வாறெனில்,

**எபேசியர் 1:22,23ல்,'சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்".**

எனும்போது கிறிஸ்து தலையாகவும், சபையானது சரீரமாகவும் உருவகமாகக் கூறப்பட்ட இரகசியம் தெளிவாகிறது. இதுபற்றி,

**1கொரிந்தியர் 12:27ல்,'நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்"**

என்கிறார். ஆக, கிறிஸ்துவும் சபையும் மனித உடலுக்கு உருவகமாக்கப்பட்டு, ஒன்றாக இணைந்த ஒரே சந்ததியாக சித்தரிக்கப்படுகிறது.

**வெளிப்படுத்தல் 14:1ல், - இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம்**

**தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்"**

கிறிஸ்துவோடுகூட சபையாக தெரிந்தெடுக்கப்படுகிறவர்கள் 1,44,000 பேர் என்ற குறிப்பிட்ட எண் இங்கு தரப்பட்டுள்ளது. இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுதலானது, ஒவ்வொரு கோத்திரத்திலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும் தேசங்களிலுமிருந்து நடக்கிறது. இயேசுவின் மரணம் முதல், இந்த யுகம் முடியும்வரை சபையின் தேர்ந்தெடுத்தல் நடக்கிறது.

**வெளிப்படுத்தல் 5:9 - '.. சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர். நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்.**

மேலும் **யாக்கோபு 1:18இல், 'அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்தியவசனத்தினாலே ஜெனிப்பித்தார்"**

ஆம். இவர்கள் தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்கள்.

**வெளிப்படுத்தல்17:14இல், 'அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்"**

எனும்போது, இவர்கள் கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடந்து இவ்வுலகை ஜெயங்கொண்டவர்கள். மேலும் இவர்களைக் குறித்து வேதத்தில் -**மணவாட்டி, கற்புள்ள கன்னிகை, ஆலயம், பரம எருசலேம், சீயோன், பரிசுத்த நகரம், பரிசுத்தவான்க்ள** என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்கள்.

ஆக, **ஆதியாகமம் 3:15லும், ஆதியாகமம் 12:3**லும் கூறப்பட்ட வித்து அல்லது சந்ததி கிறிஸ்துவும் அவருடைய சரீரமாகிய சபையுமே என்ற இந்த இரகசியம் தேவனுடைய வேதத்தில் மறைக்கப்பட்டுள்ளது, நமக்கு வெளிப்படுத்தப்பட்டதை எண்ணும்போது நாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.மேலும் அந்த சாத்தானுடைய அழிவைக் குறித்து,

**ரோமர் 16:20ல்,'சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய் சாத்தானை உங்கள் கால்களின்கீழே நசுக்கிவிடுவார்" என்று வாசிக்கிறோமே.**

**அதேபோல ஆதியாகமம் 3:15ல்,'அவர் உன் தலையை நசுக்குவார்.. நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்"**

எனும்போது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் கடைசி கால பாத அங்கங்களாகிய நம்மூலமாகவே சாத்தானுடைய அழிவு ஆரம்பமாகிறது. எவ்வாறெனில், நாம் சாத்தானை நேரடியாக அழிக்கமுடியாது, மாறாக, உண்மையான சத்திய வேத உபதேசங்கள் மூலம், அவனுடைய வஞ்சக உபதேசங்களை உலகிற்கு வெளியரங்கமாக்குவதன் மூலமாக அவனுடைய அழிவு ஆரம்பிக்கிறது. ஆனால், சபையின் எண்ணிக்கையாகிய 1,44,000 நிறைவடையும்போது மாத்திரமே சாத்தான் முற்றிலும் கட்டப்படப்போவதினால், இயேசுவின் மரணம் முதல் இன்றுவரை சாத்தானுடைய காரியங்கள் நடைபெற்று வருகிறது. அது மாத்திரமல்ல, கிறிஸ்துவும் சபையும் முழு கிறிஸ்துவாக முழுமையடையும்போது, உலகின் சகல ஜனங்களும் அவர்கள்மூலம் 1000 ஆண்டு அரசாட்சியில் ஆசீர்வதிக்கப்படுவர். இதுவே **ஆதியாகமம் 3:15ல் சொல்லப்பட்ட ஸ்திரீயின் வித்து எனும் தீர்க்கதரிசன நிறைவேறுதலாகும்.**

## ஸ்திரீயின் வித்தாகிய கிறிஸ்துவுக்கு(கிறிஸ்து+சபை) எதிரியாக வந்த சர்ப்பத்தின் வித்து யார்?

இப்போது யார் அந்த சர்ப்பத்தின் வித்து, என்றும், இந்த இரு வித்துக்களுக்கும் இடையே உள்ள பகைமை என்ன என்றும் பார்ப்போம்.

**ஆதியாகமம் 3:15**ல் கூறப்பட்ட ஸ்திரீயின் வித்து, கிறிஸ்துவும் சரீரமான சபையுமே என அறிகிறோம். அதுமாத்திரமல்ல, கிறிஸ்து தலை, சபை சரீரம் என மனித உடலுக்கு ஒப்புமைப்படுத்தி பேசப்பட்டுள்ளது.

இயேசு யூதர்களைப்பற்றிப் பேசும்போது, தேவன் தவிர வேறொரு பிதா அவர்கட்கு இருப்பதாகக் கூறுகிறார்.

> **யோவான் 8:38ல் இயேசு, ‘ நான் என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன். நீங்களும் உங்கள் பிதாவினிடத்தில் கண்டதைச் செய்கிறீர்கள்”**

ஆனால் இதற்கு யூதர்களின் மறுஉத்தரவை கவனிக்கையில்,

> **யோவான் 8:41 - ‘நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள், நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல, ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் தேவன் என்றார்கள்”**

அவர்கள் தேவனே அவர்களுடைய பிதா என்று கூறுவதை கவனிக்கிறோம். ஆனால் அவர்களுக்கு இயேசு விளக்கிக்கூறுகையில்,

**யோவான் 8:42,43 - இயேசு அவர்களை நோக்கி-**

**'தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன், நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார். என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா?"**

அவர்கள் தேவனிடம் அன்பு செலுத்தாமலும், அவரை ஏற்றுக்கொள்ளாமலும் இருப்பதினால், இயேசு அவர்களிடம், தேவன் உங்கள் பிதாவாக இருக்க வாய்ப்பில்லை என்று சொல்லுகிறார். பின்பு, அவர்களுடைய பிதா யார் என்று இயேசு தெளிவாக அடையாளப்படுத்துவதை நாம் வாசிக்கிறோம்.

**யோவான் 8:44 - 'நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்"**



ஆம். யூதர்கள் பொய்களின் பிதாவாகிய சாத்தானுடைய பிள்ளைகளாக மாறியிருந்ததை இயேசு குறிப்பிடுகிறார்.

இவ்வாறு, யூதர்கள் சர்ப்பத்தின் வித்தாக மாறி, தலையாகிய இயேசுவுக்கு பகையானார்கள். அந்தப் பகையானது இறுதியில் இயேசுவை சிலுவை மரணத்தை அடையுமளவுக்கு வழிநடத்தியது.

யூதர்கள் இயேசுவை சிலுவையில் அறையும்படி ஆர்ப்பரித்தபோது, பயன்படுத்தின வார்த்தைகளை நாம் கவனிக்கவேண்டும்.

**மத்தேயு 27:23-25 'அவனைச் சிலுவையில் அறையவேண்டும் என்று எல்லாரும் சொன்னார்கள்.. இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்.."**

இவ்வாறு **நம் ஆண்டவராகிய இயேசு,' ஸ்திரீயின் வித்தினுடைய தலையாகவும்... யூதர்கள்'சர்ப்பத்தின் வித்தாக" இருப்பதையும்,** இயேசுவோடு அவர்களுக்கிருந்த பகையையும் வேத வசனங்களில் தெளிவாகக் காண்கிறோம். இவ்வாறு யூதர்கள் இயேசுவினுடைய விரோதிகளாக இருக்கும்போது, **சரீரமாகிய சபையின் விரோதி யார்?** இதற்கான பதிலை நாம் வாசிக்கையில்,

**மத்தேயு 13:24-26 'வேறொரு உவமையை அவர்களுக்குச்சொன்னார். பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்.."**



இந்த உவமையைக் குறித்து இயேசுவே விளக்கியிருப்பதை வாசிக்கலாம்.

**மத்தேயு 13:38-39 ல் - 'நிலம் உலகம், நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர், களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்"**

இந்த உவமையின் பொருள் என்ன? முழு விளக்கத்தை பின்பு ஆராய்வோம். ஆனால் இங்கு கோதுமையும் களைகளும் ஒரே நிலத்தில் இருப்பதைக் கவனிக்கவும்.

**கோதுமை யாரைக் குறிக்கிறது? மத்தேயு 13:38இல், நல்ல விதை இராஜ்யத்தின் புத்திரர் - உண்மைக் கிறிஸ்தவர்கள்.**

**களைகள் யாரைக் குறிக்கிறது? மத்தேயு 13:38ல், களைகள் பார்ப்பதற்கு கோதுமைப்பயிர் போலவே தோற்றமளிக்கும். அதுபோல களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர் (Seed of the Wicked).**

கோதுமையும் களைகளும் கிறிஸ்தவர்களுக்குள்ளேயே இருந்துவரும் இரு வகையான கிறிஸ்தவர்கள் ஆவர். இதுவே இருவிதைகளும் ஒரே நிலத்திலிருப்பதைக் குறிக்கும். ஒரு வகுப்பார் தேவனுடைய பிள்ளைகள்.. ஆனால் மற்றொரு வகுப்பார் தேவனுடைய பிள்ளைகளைப்போன்றே தோற்றமளிக்கும் சாத்தானின் பிள்ளைகள்.

எப்படியென்று நீங்கள் கேட்கலாம். எப்படியெனில், யூதர்கள் தேவன் தங்களுடைய பிதா என்று எண்ணியிருந்தனர். ஆனால் இயேசுவையும் அவருடைய உபதேசங்களையும் விரோதித்ததின் மூலம், உண்மையில் தேவன் அவர்களுடைய பிதா இல்லை என்பதை வெளிப்படையாக்கினர்.

அதுபோல் கிறிஸ்தவர்களும் தங்களை கிறிஸ்துவுக்குரியவர்கள் என்று நினைக்கின்றனர். ஆனால் உண்மையில் இவர்கள் உண்மை கிறிஸ்தவர்களை விரோதித்து, உண்மை கிறிஸ்தவர்கள் நிலைத்து நிற்கிற சத்தியத்தையும் விரோதிப்பார்கள்.



இவ்விதமாக கிறிஸ்தவர்களுக்கு மத்தியிலும் இந்தப் பகைமை இருக்கும். அதாவது, உண்மைக் கிறிஸ்தவர்களுக்கும், பெயர்(பேருக்கு மாத்திரம்) கிறிஸ்தவர்களுக்கும் இடையே இந்தப் பகைமை இருக்கும்.
இந்தப் பகைமையைக் குறித்தும் , அதன் முடிவைக் குறித்தும்
இனி வரும் வகுப்புகளில் நாம் தியானிப்போம்.

**தேவன் தாமே நம் அனைவருக்கும் கிருபை புரிவாராக, ஆமென்**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/bibleresearch/